# ஆதி கால வரலாறு

**பாடம் 4**

## வன்முறையின் உலகம்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு   பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

இலக்கிய அமைப்பு ........ 2

**முந்தைய வன்முறையும் நம்பிக்கையும்** ........ 2

சம்பவங்கள் ........ 2

வம்ச வரலாறுகள் ........ 4

**பிந்தைய வன்முறையும் நம்பிக்கையும்** ........ 5

தேவகுமாரர்கள் ........ 6

இராட்சதர்கள் / பலவான்கள் ........ 8

பின்னுரை ........ 9

உண்மையான அர்த்தம் ........ 10

**தொடர்புகள்** ........ 10

முந்தைய வன்முறையும் நம்பிக்கையும் ........ 11

பிந்தைய வன்முறையும் நம்பிக்கையும் ........ 21

**தாக்கங்கள்** ........ 22

நவீன பயன்பாடு ........ 23

**தொடக்கம்** ........ 24

வன்முறை ........ 24

விடுதலை ........ 25

**தொடர்ச்சி** ........ 27

தொடரும் வன்முறை ........ 27

தொடரும் விசுவாசம் ........ 28

**ராஜ்யத்தின் நிறைவு** ........ 28

வன்முறையின் முடிவு ........ 29

இறுதி விடுதலை ........ 29

முடிவுரை ........ 30





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

சிறு குழந்தைகள் எப்படி ஆபத்தான சூழ்நிலைகளின் ஊடாகப் பயமின்றி செல்கிறார்கள் என்பதை நீங்கள் எப்போதாவது கவனித்தது உண்டா? அவர்கள் கொஞ்சமும் கவனிப்பு இல்லாமல் சாலையின் நடுப்பகுதிக்குச் சென்று விடுகிறார்கள். கூர்மையான கத்தியை அஜாக்கிரதையாகக் கையில் எடுக்கிறார்கள். சில நேரங்களில் அந்நியர்களால் நேரக்கூடும் வன்முறையை மறந்தவர்களாய் நேராய் அவர்களிடம் சென்று, அவர்கள் கரங்களைப் பிடித்து அவர்களுடன் நடக்கத் தொடங்கி விடுகிறார்கள். ஆனால் பெரிய வயதுடையவர்களுக்கு இந்த உலகம் முழுவதும் பலவித பிரச்சனைகளால் நிறைந்துள்ளது என்று தெரியும். இயற்கைப் பேரழிவுகள் வாழ்வையும் உடைமையையும் அழிக்கின்றன. நோய்கள் துன்பத்தைக் கொண்டுவருகின்றன. இயந்திரங்கள் நமக்குத் தீங்கு விளைவிக்கலாம். சக மனிதர்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களே இவைகளெல்லாவற்றிலும் பெரியது என்று நமக்குத் தெரியும். ஆண்களும் பெண்களும் தங்கள் சக மனிதர்கள் மீது தாக்குதல், கொலை மற்றும் யுத்தம் போன்ற வன்முறைச் செயல்களைச் செய்கிறார்கள். மனித வரலாற்றை நாம் அறிந்திருந்தோமானால், அல்லது தற்போதைய நிகழ்வுகளை நாம் கவனித்தால், மனிதர்கள் இந்த உலகத்தை வன்முறையால் நிரப்பியுள்ளனர் என்பதை மறுக்க முடியாது.

இப்பாடத்திற்கு "வன்முறையின் உலகம்" என்று பெயரிட்டுள்ளோம். இங்கு நாம் ஆதியாகமம் 4:1–6:8 யைப் பார்க்கப் போகிறோம். அதில் மோசே மனுக்குலம் பாவத்தில் விழுந்த சிறிது நேரத்தில் உலகில் நடந்த பிரச்சினைகள் மற்றும் வன்முறைகளை விவரித்துள்ளார். இந்த அதிகாரங்களில் மனுக்குலம் எப்படி உலகத்தை வன்முறையால் நிரப்ப ஆரம்பித்தனர் என்றும் அவற்றுக்கு தேவன் எப்படி உத்தரவளித்தார் என்றும் மோசே விவரித்துள்ளார். ஆதியாகமத்தின் இந்தப் பகுதியின் மூன்று அம்சங்களை நாம் ஆராய்வோம்: முதலில், இந்தப் பகுதியின் இலக்கிய அமைப்பைப் பார்ப்போம்; இரண்டாவதாக, இந்த அதிகாரங்களின் உணமையான அர்த்தத்தில் கவனம் செலுத்துவோம்; மூன்றாவதாக, இந்த வேதபகுதிகளை நம்முடைய அன்றாடக வாழ்வில் பயன்படுத்த புதிய ஏற்பாடு எவ்வாறு நமக்குக் கற்பிக்கிறது என்பதை நாம் ஆராய்வோம். ஆதியாகமம் 4:1–6:8 இன் இலக்கிய அமைப்பை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# இலக்கிய அமைப்பு

ஆதியாகமத்தில் உள்ள இந்த அதிகாரங்கள், சம்பவங்கள் மற்றும் வம்சவரலாறு இரண்டையும் உள்ளடக்கிய பல்வேறு தலைப்புகளைத் தொடுகின்றன. இப்போது, இச்சிக்கல்கள் பெரும்பாலும் இந்த அதிகாரங்கள் சரியாகப் பொருந்தவில்லை என்ற எண்ணத்தை நமக்குத் தருகின்றன. ஆனால் ஆதியாகமத்தின் இந்தப் பகுதியை நாம் இன்னும் உன்னிப்பாக ஆராயும்போது, அது ஒருங்கிணைந்த நோக்கத்துடன் கவனமாக வடிவமைக்கப்பட்ட ஒரு இலக்கியப் படைப்பு என்பதை நாம் காணலாம். ஆதியாகமம் 4:1–6:8 ஐ நாம் பார்க்கும்போது, ஆதியாகமத்தின் இந்தப் பகுதி இரண்டு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதைக் காண்போம். 4:1–5:32 ஐ கொண்டுள்ள முதல் பிரிவிற்கு, ”முந்தைய வன்முறையும் நம்பிக்கையும்” என்று தலைப்பிட்டுள்ளோம். 6:1-8 யை கொண்டுள்ள இரண்டாவது பிரிவிற்கு, ”பிந்தைய வன்முறையும் நம்பிக்கையும்” என்று தலைப்பிட்டுள்ளோம்.

## முந்தைய வன்முறையும் நம்பிக்கையும்

ஆதியாகமம் 4-5 இல் வன்முறை மற்றும் விடுதலையின் நம்பிக்கையின் ஆரம்பநிலை நான்கு பகுதிகளாகப் பிரிகிறது. மேலும் இந்த பகுதிகள் இரண்டு இணையான தொகுப்புகள் மற்றும் வம்சாவளியை உருவாக்குகின்றன: 4:25-26 இல் இரண்டாவது சம்பவத்திற்கு இணையாக உள்ள ஒரு சம்பவத்தை 4:1-16 உருவாக்குகிறது. மேலும் 4:17-24 ஒரு வம்சாவளியை உருவாக்குகிறது, இது 5:1-32 இல் இரண்டாவது வம்சாவளிக்கு ஒத்திருக்கிறது. இந்த இரண்டு சம்பவங்களுக்கு இடையிலான சில தொடர்புகளை ஆய்வு செய்வதன் மூலம் இந்தப் பகுதிகளை நாம் ஆராயலாம். பின்னர் இந்த இரண்டு வம்சாவளிகளுக்கு இடையிலான இணைகளில் நாம் கவனம் செலுத்துவோம்.

### சம்பவங்கள்

முதலில், மோசே 4:1-16 இல் பாவம் நிறைந்த காயீனைப் பற்றிய ஒரு சம்பவத்தை எழுதத் தொடங்கினார். இந்த வேதபகுதி காயீன் பொறாமையில் ஆத்திரங்கொண்டு அவன் சகோதரன் ஆபேலைக் கொன்ற காலத்தின் நன்கு அறியப்பட்ட பதிவாகும். இந்த வேதபகுதியை நாம் இன்னும் உன்னிப்பாகப் பார்க்கும்போது, அது ஐந்து வியத்தகு படிகளாகப் பிரிவது தெளிவாகிறது. 1-2 வசனங்களில் காயீனும் ஆபேலும் ஒற்றுமையாக வாழ்வதாக இந்த சம்பவம் ஆரம்பிக்கிறது. ஆனால், வசனம் 16 இல் உள்ள சம்பவத்தின் முடிவை நாம் பார்க்கும்போது மிகவும் வித்தியாசமான சூழலைக் காண்கிறோம். காயீன் அந்த நல்ல நிலத்திலிருந்தும், அவனுடைய குடும்பத்திலிருந்தும், தேவனின் விஷேசித்த பிரசன்னத்திலுமிருந்து வெளியேற்றப்பட்டு தனியாக இருக்கிறான்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த சம்பவத்தின் இரண்டாவது நிலை, 2-7 வசனங்களில் காணப்படுகிறது. அது காயீன் ஆபேலைக் கொலை செய்ய வழிவகுத்த நிகழ்வுகளை, குறிப்பாக தேவனுக்கு செலுத்தப்பட்ட பலிகளில் உள்ள வேறுபாட்டைத் தொடுகிறது. ஆபேலின் பலி தேவனுக்குப் பிரியமாயிருந்தது, ஆனால் காயீனின் பலியை அவர் நிராகரித்தார். மேலும் தேவன் காயீனை ஆள முற்பட்ட பாவத்தைக் குறித்து எச்சரித்தார். ஆனால் காயீன் அதற்குச் செவிகொடுக்கவில்லை. இந்தப் பகுதியில் காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொலை செய்தான். காயீனும் ஆபேலும் பலி செலுத்திய இடத்திலிருந்து கிளம்பிச்சென்று வயல்வெளியில் இருக்கையில், தேவன் எச்சரித்தபடி, பாவம் காயீனை ஆட்கொண்டு மானிட வரலாற்றில் முதல் கொலைகாரனாக மாற்றியது. இந்த சம்பவத்தின் நான்காவது பகுதி 9-15 வசனங்களில் தோன்றுகிறது. தேவன் காயீனுக்கு அளித்த சாபம் மற்றும் பாதுகாப்பை இது விவரிக்கிறது. தேவன் காயீனை ஏதேன் நிலத்திலிருந்து விரட்டிவிட்டு வெகுதூரத்தில் அலைந்து திரியும்படி சாபமிட்டார். ஆனால் மற்ற மனிதர்களால் தாக்கப்படுவதிலிருந்தும் அவனைப் பாதுகாத்தார்.

எனவே ஆதியாகமம் 4–5 காயீனின் கொடிய பாவ சம்பவத்துடன் தொடங்குகிறது என்று நாம் பார்க்கிறோம். பாவத்தால் மிகவும் சீர்கெட்ட அவன், தன் நீதியுள்ள சகோதரன் ஆபேலைக் கொன்றான். இதன் விளைவாக, அவன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட இடத்திலிருந்து வெகு தொலைவில் வசிக்கக் கட்டளையிடப்பட்டான்.

ஆதியாகமம் 4-5 இன் தொடக்க சம்பவத்தின் கட்டமைப்பை இப்போது நாம் பார்த்திருக்கும் வேளையில், இந்த அதிகாரங்களில் 4:25-26 இல் அதற்குத் தொடர்புடைய குறிப்பில் தோன்றும் இரண்டாவது சம்பவத்திற்கு நாம் திரும்ப வேண்டும். இந்த வேதபகுதி நம் கவனத்தை பாவம் நிறைந்த காயினிடமிருந்து, ஆதாமின் மூன்றாவது மகனான நீதிமான் சேத்தினிடத்திற்குத் திருப்புகிறது.

நீதிமான் சேத்தைப் பற்றிய அறிக்கை மூன்று குறுகிய கட்டங்களாகப் பிரிகிறது. முதலில், 4:25 இல், ஏவாள் சேத்தைப் பெறுகிறாள். இந்த அறிக்கையின் இரண்டாவது கட்டம் 4:26 முதல் பகுதியில் தோன்றுகிறது. அங்கு சேத்திற்கு ஏனோஸ் என்ற மகனும் இருப்பதை மோசே குறிப்பிட்டுள்ளார். இந்த நிகழ்வில் பெரிதாக எதுவும் நடக்கவில்லை. ஆனால் மோசே 4:26 இல் மூன்றாவது கட்டத்துடன் ஏனோஸின் பிறப்பு பற்றிய அறிக்கையைப் பின்பற்றி, அங்கு இந்தக் குடும்பத்தின் ஆவிக்குரிய தன்மையைப் பற்றிச் சொன்னார். 4:26 இல் மோசே இந்த வார்த்தைகளை எழுதினார்:

> அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் (ஆதியாகமம் 4:26b).

எளிமையாகச் சொன்னால், சேத் மற்றும் ஏனோஸ் தேவனை ஜெபத்தில் அழைத்த புருஷர்கள் ஆவார். பாவம் நிறைந்த காயீனுக்கு மாறாக, இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மனிதர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக இருந்து, இந்த நீதியை உண்மையுள்ள ஆராதனை மற்றும் ஜெபத்தின் மூலம் நிரூபித்தனர்.

## வம்ச வரலாறுகள்

இந்த இணையான சம்பவங்களின் அடிப்படை முரண்பாடுகளை மனதில் கொண்டு, நாம் இப்போது 4-5 அதிகாரங்களின் இணையான வம்ச வரலாற்றுக்குத் திரும்ப வேண்டும். ஆதியாகமம் 4-5 இன் வம்ச வரலாறுகள் பெரும்பாலும் உயிரியல் வம்சாவளியின் தெளிவற்ற பதிவுகளை விட ஒரு படியே அதிகமாகத் தெரிவதால் பல மொழிபெயர்ப்பாளர்கள் அவற்றின் முக்கியத்துவத்தைக் கவனிக்கவில்லை. இருப்பினும், இந்த வம்சாவளிகளை உற்று நோக்கினால், மோசே ஆதி கால வரலாற்றின் இந்தப் பகுதியை எழுதும் நோக்கத்திற்கு முக்கியத் தகவல்கள் இதில் இருப்பது வெளிப்படும்.

ஒருபுறம், முதல் வம்சாவளி காயீனின் பாவ சந்ததியை 4:17-24 இல் பதிவு செய்கிறது. இந்த வசனங்களில், காயீனின் பல சந்ததியினரை மோசே பட்டியலிட்டு, பாவம் இந்தக் குடும்பத்தை எப்படி பெருமையுள்ள, அகங்காரமுள்ள மற்றும் அச்சுறுத்தும் கோத்திரமாக மாற்றியது என்பதை எடுத்துரைத்தார். இரண்டாவது வம்சாவளியில் சேத்தின் நீதியுள்ள சந்ததி 5:1-32 இல் காணப்படுகிறது. இந்த வேதபகுதியில் மோசே, சேத்தின் குடும்பத்தில் பல முக்கியமான பெயர்களைப் பதிவு செய்தார். ஆயினும், காயீனின் சந்ததிக்கு மாறாக, இந்தக் குடும்பம் தொடர்ந்து நீதியுடனும் உண்மையுடனும் இருந்தது.

இந்த நோக்கத்தை நாம் காணக்கூடிய ஒரு வழி, இரண்டு பட்டியலிலும் இரண்டு பெயர்களை மோசே சேர்த்த விதத்தைக் கவனிப்பதாகும். காயீன் மற்றும் சேத் ஆகிய இவ்விரண்டு சந்ததியிலும் ஏனோக்கு மற்றும் லாமேக்கு என்ற பெயர்கள் உள்ளன. மோசே இந்த மனிதர்களை ஒருவரிலிருந்து மற்றொருவரை தெளிவாக வேறுபடுத்திக் காட்டினார். ஏனோக்கு என்ற இருவேறு மனிதர்களைப் பற்றி மோசே சொன்னதை முதலில் கவனியுங்கள். ஒருபுறம், ஆதியாகமம் 4:17 இல் காயீனின் வம்சாவளியான ஏனோக்கைப் பற்றிய இந்த வார்த்தைகளைப் படிக்கிறோம்:

> அவன் [காயீன்] ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான். (ஆதியாகமம் 4:17).

காயீனும் அவன் மகன் ஏனோக்கும் இந்தப் பட்டணத்திற்கு ஏனோக்கின் பெயரைச் சூட்டி பெருமிதத்தில் தங்களைத் தாங்களே உயர்த்தினர். சேத் சந்ததியின் ஏனோக்கு பற்றி மோசே என்ன எழுதினார் என்று கவனிக்கும் போது இந்தக் கருத்தின் முக்கியத்துவத்தை நாம் பார்க்க முடியும். 5:24 இல், சேத்தின் ஏனோக்கைப் பற்றி மோசே இவ்வாறு வர்ணிக்கிறார்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார். (ஆதியாகமம் 5:24).

பாவமுள்ள ஏனோக்கிற்கும் நீதியுள்ள ஏனோக்கிற்கும் இடையில் நாம் இங்கு காணும் குறிப்பிடத்தக்க முரண்பாட்டை விட இரண்டு மனிதர்களுக்கிடையேயான வித்தியாசத்தை கற்பனை செய்வது கடினமாகும்.

ஏனோக்கு என்ற இருவேறு மனிதர்களுக்கிடையில் அமைக்கப்பட்ட முரண்பாடுகளுக்கும் கூடுதலாக, மோசே காயீனின் சந்ததியில் உள்ள ஒரு லாமேக்கு மற்றும் சேத்தின் சந்ததியில் உள்ள ஒரு லாமேக்கு பற்றியும் குறிப்பிட்டார். மீண்டும், இந்த இரண்டு பேர்களுக்கிடையில் வலுவான முரண்பாடுகள் தனித்துத் தெரிகின்றன. ஒருபுறம், காயீனின் லாமேக்கு ஒரு பயங்கரமான நபர். ஆதியாகமம் 4:23-24, லாமேக்கு ஒரு கொலைகாரன் என்றும், தன்னுடைய கொலை பாதகங்களில் பெரும் பெருமை கொண்டான் என்றும் கூறுகிறது. மாறாக, சேத்துடைய லாமேக்கின் தன்மையைக் காட்ட, மோசே தனது மகனின் பிறப்பில் 5:29 இல் லாமேக்கின் வார்த்தைகளைப் பதிவு செய்தார்:

> கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான வேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத் தேற்றுவான் என்று சொல்லி, [லாமேக்கு] அவனுக்கு நோவா என்று பேரிட்டான். (ஆதியாகமம் 5:29).

வேதாகமக் காலங்களின் வழக்கப்படி, சேத்தின் லாமேக்கு தனது மகனுக்குப் பெயரிடும் போது தேவனிடம், ஆதாம் மற்றும் ஏவாளின் நாட்களில் தேவன் பூமியைச் சபித்தபோது தொடங்கிய பயங்கரமான வாழ்க்கையிலிருந்து தனது மகன் நோவா விடுவிப்பான் என்ற நம்பிக்கையை விண்ணப்பமாக வெளிப்படுத்தினார்.

இப்போது நாம் ஆதியாகமம் 4–5 எப்படி ஆரம்பகால வன்முறை மற்றும் விடுதலையின் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது என்பதைக் கவனித்திருக்கும் வேளையில், ஆதியாகமம் 6:1-8 இல் தோன்றும் வன்முறை மற்றும் நம்பிக்கையின் இரண்டாவது சூழலுக்கு நாம் திரும்ப வேண்டும்.

## பிந்தைய வன்முறையும் நம்பிக்கையும்

இந்த வசனங்களை நாம் உன்னிப்பாகப் பார்க்கும்போது, 6:1-8 மூன்று படிகளாகப் பிரிகிறது என்பது தெளிவாகிறது: முதலாவதாக, 1-3 வசனங்கள் ”தேவகுமாரர்” என்று அழைக்கப்படும் கதாபாத்திரங்களைப் பற்றியது. இரண்டாவதாக, வசனங்கள் 4-7 ”இராட்சதர்” என்று அழைக்கப்படும் மற்ற கதாபாத்திரங்களில் கவனம் செலுத்துகிறது. இந்த இரண்டு படிகளைப் பின்பற்றி, மோசே 8 வது வசனத்தில் ஒரு பிந்தைய வார்த்தையைச் சேர்த்து,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நம்பிக்கையும் மீட்பும் கொண்டிருந்த நோவாவை மீண்டுமொருமுறை குறிப்பிடுகிறார்.

## தேவகுமாரர்கள்

இந்த வசனங்களின் இரண்டு முக்கிய நிலைகள் பூமியில் நடந்த தொடர்ச்சியான அச்சுறுத்தும் நிகழ்வுகளை விவரித்து, இந்த நிகழ்வுகளுக்கு தேவன் எவ்வாறு பதிலளித்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. நாம் முதலில் தேவகுமாரரின் அச்சுறுத்தல் பற்றியும் அதற்கு தேவனின் நிலைப்பாடு என்ன என்று 6:1-3 இல் பார்ப்போம். எதிர்பாராதவிதமாக, ஆதியாகமப் புத்தகத்தில் விளக்குவதற்கு மிகவும் சிரமமான வசனங்களின் மத்தியில் இந்த வசனங்கள் உள்ளன. அடிப்படையில் வசனம் 2 இல் நாம் வாசிக்கிற இந்த வார்த்தைகளில் இச்சிரமம் மையம் கொண்டுள்ளது:

> தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்துகொண்டார்கள். (ஆதியாகமம் 6:2).

இந்த தேவகுமாரர் மற்றும் மனுஷகுமாரத்திகள் யார் என்பதை மோசே துல்லியமாக விளக்கவில்லை. தெளிவாக, அவர் தனது ஆதி வாசகர்கள் அவர் சொன்னதைப் புரிந்துகொள்வார்கள் என்று எதிர்பார்த்தார். ஆனால் நவீன வாசகர்களால் இந்த கதாபாத்திரங்களின் அடையாளங்களை கேள்விக்கு அப்பாற்பட்டு முடிவுசெய்ய இயலவில்லை.

மொழிபெயர்ப்பு வரலாற்றில், மூன்று நியாயமான அடையாளங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. முதலில், தேவகுமாரர் காயீனிலிருந்து வந்த குமாரத்திகளை திருமணம் செய்த சேத்தியர்களாக இருக்கலாம். ஆதியாகமம் 4-5 அதிகாரங்களில் காயீனியர்கள் மற்றும் சேத்தியர்கள் இடையே ஏற்படுத்தப்பட்ட முரண்பாடுகள் காரணமாக இந்த விளக்கம் சில சான்றுகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது தேர்வு என்னவென்றால், தேவகுமாரர் தேவதூதர்களாக இருக்கலாம், மற்றும் மனுஷகுமாரத்திகள் சாதாரண மானுடர்கள். இந்தக் கண்ணோட்டத்திற்கும் சில தகுதிகள் உள்ளன. ஏனென்றால் பழைய ஏற்பாட்டில் யோபு 1:6 மற்றும் சங்கீதம் 29:1 போன்ற வேதபகுதிகளில் தேவதூதர்கள் அடிக்கடி ”தேவபுத்திரர்” என்று அழைக்கப்படுகிறார்கள். மூன்றாவது, தேவகுமாரர்களை சிறு நிலப்பகுதியைச் சார்ந்த பெண்களைத் தங்களுக்குத் தெரிந்துகொண்ட ராஜாக்கள் அல்லது பிரபுக்களாகப் புரிந்துகொள்வது. 2 சாமுவேல் 7:14 மற்றும் சங்கீதம் 2:7 இல் தாவீதின் குமாரன் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படுவதைப் போல, பண்டைய கிழக்கத்திய தேசங்களின் ராஜாக்கள் அடிக்கடி தேவகுமாரர்கள் என்று அழைக்கப்பட்டதால் இந்தக் கண்ணோட்டத்திற்கும் கூட ஆதாரம் உண்டு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த மூன்றாவது விளக்கத்தை நான் ஆதரித்தாலும், எந்தவொரு குறிப்பிட்ட நிலைப்பாட்டையும் பற்றி நாம் பிடிவாதமாக இருக்கக்கூடாது இந்தக் கதாபாத்திரங்கள் யார் என்று நமக்கு உறுதியாகத் தெரியாவிட்டாலும், அவர்கள் என்ன செய்தார்கள் என்பதில் நாம் இன்னும் உறுதியாக இருக்க முடியும். ஆதியாகமம் 6:2 இல் நாம் இதை வாசித்தோம் என்பதை நீங்கள் நினைவு கூரலாம்:

> தேவகுமாரர் … அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் [மனுஷகுமாரத்திகளை] தெரிந்துகொண்டார்கள். (ஆதியாகமம் 6:2).

பழைய ஏற்பாட்டில் முறையான திருமணத்திற்கான வழக்கம் இது அல்ல. மேலும் இந்த உறவுகளுக்கு ஸ்திரீகளோ அல்லது அவர்களது குடும்பங்களோ சம்மதிக்கவில்லை என்று அது பலமாக அறிவுறுத்துகிறது. மாறாக, தேவகுமாரர், பலம்வாய்ந்த பிரபுக்களாக இருந்திருக்கக்கூடும் என்பதால், பெண்களை அவர்களின் அனுமதியின்றி கட்டாயமாகத் தெரிந்துகொண்டார்கள். இங்குள்ள மொழி தேவகுமாரர் உண்மையில் இந்தப் பெண்களைத் தங்கள் விருப்பத்தின் பேரில் பாலியல் பலாத்காரம் செய்ததாகக்கூட அர்த்தம் கொள்ளும். எல்லா நிகழ்வுகளிலும், முன்னதாக எடுத்துக்காட்டப்பட்ட காயீன் மற்றும் அவனது சந்ததியினரின் துர்ச்செய்கைகள் வன்முறை வாழ்க்கையின் மற்றொரு கட்டத்தை அடைந்தது – பெண்களிடம் அத்துமீறல்.

தேவகுமாரரின் அச்சுறுத்தலை மோசே விவரித்த பிறகு, அவர் இந்த நிகழ்வுகளுக்கு தேவனின் பதில் என்னும் தனது முக்கிய நோக்கத்திற்குத் திரும்பினார். இந்த வார்த்தைகளை நாம் ஆதியாகமம் 6:3 இல் வாசிக்கிறோம்:

> அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப்போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார் (ஆதியாகமம் 6:3).

மனுக்குலத்திற்கு பாவம் தொடர்ந்து வன்முறையைக் கொண்டு வந்ததால் தேவன் விசனப்பட்டு, இந்த சீர்கேட்டை தாம் எப்போதும் பொறுத்துக்கொள்வதில்லை என்று அறிவித்தார். இருப்பினும், தேவன் தமது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு முன்பு இன்னும் நூற்றி இருபது ஆண்டுகளுக்கு மனுக்குலத்தை அனுமதிக்க இரக்கத்துடன் தீர்மானித்தார்.

பூமியில் இரண்டாவது செயல்களின் ஒரு தொகுப்பு மற்றும் தெய்வீக எதிர்வினை ஆதியாகமம் 6:4-7 இல் காணப்படும் இராட்சதர்களின் குறிப்பாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## இராட்சதர்கள் / பலவான்கள்

4 ஆம் வசனத்தில் மற்றொரு அச்சுறுத்தக்கூடிய சூழல் உருவானதை வாசிக்கிறோம்:

> அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; --- பின்பு --- தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள் (ஆதியாகமம் 6:4).

இப்போது, சில பழைய வேதாகமங்கள் வெறுமனே பழைய கிரேக்க பதிப்பைப் பின்தொடர்ந்து, ”நெஃபிலிம்” என்ற எபிரேய வார்த்தையை ”ராட்சதர்கள்” என்று மொழிபெயர்க்கின்றன. ஆனால் இது இந்த வார்த்தையின் சரியான அர்த்தத்தைத் தெரிவிக்கவில்லை என்பதால், இந்த மொழிபெயர்ப்பு துரதிர்ஷ்டவசமானது. அறிஞர்களின் கருத்து இந்த வார்த்தையின் துல்லியமான அர்த்தத்தை விளக்குவதில் வேறுபடுகிறது. ஆனால் அது பெரும்பாலும் வலிமையான வீரர்கள் அல்லது போர்வீரர்களைக் குறிக்கிறது.

இந்த வேதபகுதியில், மோசே இந்த நெஃபிலிம்களை ”பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்கள்” என்று குறிப்பிட்டார். எபிரெய மொழியில் ”ஹீரோஸ்” அல்லது *ஹகிபோரிம்* (הַגִּבֹּרִים) என்ற சொல் வீரர்களையோ அல்லது பலம்வாய்ந்த வீரர்களையோ குறிக்கிறது. இந்தச் சூழலில், நெஃபிலிம்களின் இராணுவ இகழ்ச்சி எதிர்மறையாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த மனிதர்கள் அவர்களின் சுயநலப் போர் மற்றும் வன்முறைக்கு பெயர் பெற்றவர்களாய்த் தங்களைச் சுற்றியுள்ளவர்கள் மீது பயங்கரவாதத்தை ஏற்படுத்தியவர்கள். காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொலைசெய்த போது தொடங்கிய வன்முறை, காயீனின் வம்சாவளியான லாமேக்கில் தொடர்ந்து, இப்போது நெஃபிலிம் வீரர்கள் ஒவ்வொரு கட்டத்திலும் வன்முறையால் அச்சுறுத்தியதால் இன்னும் அதிக அளவை அடைந்தது. வசனம் 5 இல் நாம் வாசிப்பதைப் போல:

> மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டார் (ஆதியாகமம் 6:5).

நெஃபிலிம்களின் தோன்றலுடன் மனுக்குலத்தின் சீர்கேடு, பாவம் அவர்களை முற்றிலுமாக ஆக்கிரமிக்கும் அளவிற்கு வளர்ந்தது. இதன் விளைவாக, வசனங்கள் 6-7 இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. அப்பொழுது கர்த்தர்: "நான் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல் வைக்காமல் --- மனுஷன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம்பண்ணுவேன் --- நான் அவர்களை உண்டாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது" என்றார் (ஆதியாகமம் 6:6-7).

நெஃபிலிம் தமது உலகத்தை எப்படி அச்சுறுத்தியது என்பதை தேவன் கண்டார். மேலும் மொத்தமாக உலகளாவிய அழிவில் தலையிட வேண்டிய நேரம் இது என்று தீர்மானித்தார்.

## பின்னுரை

நல்லவேளையாக, ஆதியாகமம் 6:1-8 நியாயத்தீர்ப்பு வார்த்தைகளுடன் முடியவில்லை. அதற்குப் பதிலாக, மோசே தனது ஆதிவரலாற்றின் இந்தப் பகுதியின் மேலோட்டமான வடிவங்களை வைத்து, வசனம் 8 இல் நம்பிக்கை தரும் பின்னுரையைச் சேர்த்தார். பாவச் சீர்கேட்டின் காரணமாக மனுக்குலத்தை அழிக்க தேவன் தீர்மானித்திருந்தாலும், நம்பிக்கையை அளித்த ஒரு மனிதன் இருந்தான் என்று நாம் வாசித்தோம்:

> நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதியாகமம் 6:8).

இவ்வார்த்தைகளில், அச்சுறுத்தல் மற்றும் விடுதலையின் நம்பிக்கைச் சூழலை மோசே நிறைவு செய்தார். ஜலப்பிரளயத்தின் மூலம் வன்முறை மற்றும் பாவம் நிறைந்த மனுக்குலத்தை அழிப்பது உண்மையில் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு விடுதலையை ஏற்படுத்தும்.

ஆதியாகமம் 4:1–6:8 இன் இலக்கியக் கட்டமைப்புகள் பற்றிய நமது ஆய்வுகளிலிருந்து, ஆதியாகமத்தில் உள்ள இந்த அதிகாரங்கள் இரண்டு முக்கிய பிரச்சனைகளில் கவனம் செலுத்துவதை நாம் காண்கிறோம்: முதலாவது அவர்கள் கவனம், காயீன் மற்றும் அவனுடைய சந்ததியினரின் நாட்களில் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்தவர்களிடமிருந்து, வன்முறை என்ற அச்சுறுத்தலில் இருக்கிறது; இரண்டாவதாக, அவர்கள் தேவகுமாரர் மற்றும் நெஃபிலிம்களின் நாட்களில் பாவமுள்ள மக்களின் அச்சுறுத்தலில் கவனம் செலுத்துகிறார்கள். எப்படியும் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், நோவா என்னும் பெயர் கொண்ட சேத்தின் ஒரு விஷேசித்த மகன் மூலம் தேவன் விடுதலையளிப்பார் என்று மோசே குறிப்பிட்டார்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆதியாகமத்தின் இந்தப் பகுதியின் அடிப்படைக் கட்டமைப்பையும் முக்கிய விஷயங்களையும் இப்போது நாம் பார்த்திருக்கும் வேளையில், இரண்டாவது கேள்வியைக் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த அதிகாரங்களின் உண்மையான அர்த்தம் என்ன? இஸ்ரவேல் மக்களை மோசே எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் சென்றபோது அவர்களிடம் அறிவித்தது என்ன?

# உண்மையான அர்த்தம்

ஆதிவரலாற்றின் இந்தப் பகுதியின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ள, இது இரண்டு விஷயங்களைக் கருத்தில் கொள்ள உதவும்: முதலாவது, மோசே தனது ஆதிவரலாற்றின் இந்தப் பகுதியை இஸ்ரவேலின் அனுபவத்துடன் எவ்வாறு இணைத்தார் என்பதை நாம் பார்ப்போம்; இரண்டாவதாக, மோசேயின் முதல் இஸ்ரவேல் வாசகர்களுக்கான இந்த இணைப்புகளின் தாக்கங்களை நாம் ஆராய்வோம். மோசே இந்த அதிகாரங்களை அவர் வழிநடத்திய இஸ்ரவேலர்களின் அனுபவங்களுடன் இணைத்த வழிகளைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## தொடர்புகள்

மோசே இஸ்ரவேல் ஜனங்கள் அனுபவித்த அடக்குமுறை அனுபவங்களை ஆரம்பகால மனித வரலாற்றின் வன்முறையை ஒத்திருக்கும் விதத்தில் விவரிப்பதன் மூலம் தனது ஆதிவரலாற்றின் இந்த அதிகாரங்களை தனது சமகால உலகத்துடன் தொடர்புபடுத்தினார். அவ்வாறு செய்வதன் மூலம், இஸ்ரவேல் சந்தித்த பிரச்சனைகள் ஆதி உலகின் பிரச்சனைகளுக்கு மிகவும் ஒத்ததாக இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இப்போது, மோசே இந்த ஒற்றுமைகளை எவ்வாறு உறுதிப்படுத்தினார் என்பதை ஆராய, நாம் ஆதியாகமம் 4:1-6:8 இன் இரண்டு முக்கிய பிரிவுகளை மீண்டும் பார்ப்போம்: 4-5 அதிகாரங்களில் முந்தைய வன்முறையும் விடுதலையின் நம்பிக்கையும் என்னும் முதல் சூழல், மற்றும் 6:1-8 இல் பிந்தைய வன்முறையும் விடுதலையின் நம்பிக்கையும் என்னும் இரண்டாவது சூழல். ஆதியாகமம் 4–5 இஸ்ரவேலின் அனுபவத்துடன் தொடர்புள்ளது என்பதை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## முந்தைய வன்முறையும் நம்பிக்கையும்

ஆதியாகமம் 4-5 இல் உள்ள பொல்லாத மற்றும் நீதிமான்களின் குணாதிசயங்களைப் பார்க்கும்போது, மோசேயின் வாசகர்கள் காயீனையும் அவனது குடும்பத்தினரையும் எகிப்தியர்களுடனும் நீதிமான்களான ஆபேல், சேத் மற்றும் சேத்தியர்களை தேவனுடைய ஜனங்களாகிய தங்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் விதத்தில் இந்த விஷயத்தை வடிவமைத்தார் என்பது தெளிவாகிறது. மோசே இந்த தொடர்புகளை எப்படி உருவாக்கினார்?

**சம்பவங்கள்.** ஆதியாகமம் 4:1-16 இல் பாவம் நிறைந்த காயீனின் கதையை ஆராய்வதன் மூலம் நாம் தொடங்க வேண்டும். இந்த சம்பவத்தில், இஸ்ரவேலர்கள் இந்த வேதபகுதியை தாங்கள் வாழ்ந்த காலத்துடன் இணைக்க அனுமதிக்கும் ஐந்து காரியங்களிலாவது மோசே கவனம் செலுத்தினார். முதலில், இந்த தொடர்புகளை உருவாக்க காயீன் மற்றும் ஆபேலின் தொழில்களை மோசே குறிப்பிட்டார்.

ஆதியாகமம் 4:2 இல் காயீன் மற்றும் ஆபேல் ஆரம்பத்தில் வேறுபடுத்தப்பட்ட விதத்தைப் பாருங்கள்:

> ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான் (ஆதியாகமம் 4:2).

இப்பகுதி குறிப்பிடுவது போல, காயீன் ஒரு குடியேறிய விவசாயி, ஒரு உழவன் ஆவான். அதே நேரத்தில் ஆபேல் ஒரு மேய்ப்பன் ஆவான். பண்டைய மற்றும் நவீன காலங்களில், குடியேறிய, விவசாயம் சார்ந்த சமூகங்களுக்கும் நாடோடி மேய்ப்பர்களுக்கும் இடையே பதற்றம் ஏற்படுவது சகஜமானது. ஆதியாகமப் புத்தகம் குறிப்பிடுவது போல, மோசேயும் இஸ்ரவேலர்களும் எகிப்தில் இருந்தபோது இவ்வகையான பதற்றம் எப்படி கடுமையான கஷ்டங்களுக்கு வழிவகுத்தது என்பதை நன்கு அறிந்திருந்தனர். ஆதியாகமம் 46:33-34 இல், யோசேப்பு எகிப்துக்கு வந்த தனது சகோதரர்களிடம் இவ்வாறு அறிவுறுத்தினான்

> பார்வோன் உங்களை அழைத்து, "உங்கள் தொழில் என்ன?" என்று கேட்டால், நீங்கள், கோசேன் நாட்டில் குடியிருக்கும்படி, அவனை நோக்கி: "எங்கள் பிதாக்களைப்போல, உமது அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயதுமுதல் இதுவரைக்கும் மேய்ப்பர்களாயிருக்கிறோம்" என்று சொல்லுங்கள்; மேய்ப்பர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்கள் என்றான் (ஆதியாகமம் 46:33-34).

காயீன் ஒரு விவசாயி மற்றும் ஆபேல் ஒரு மேய்ப்பன் என்று மோசே ஏன் குறிப்பிட்டார் என்பதை இங்கே யோசேப்பின் அறிவுறுத்தல்கள் நமக்கு ஆழமான புரிதலைக் கொடுக்கின்றன. அவர் தனது இஸ்ரவேல் வாசகர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எகிப்தியர்களுடன் விவசாயியான காயீனை ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள விரும்பினார். மேலும் இஸ்ரவேலாகிய தங்களை பாதிக்கப்பட்ட மேய்ப்பனான ஆபேலுடன் ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள விரும்பினார்.

இந்த சம்பவத்திற்கும் மோசேயின் முதற்கட்ட பார்வையாளர்களுக்கும் இடையேயான இரண்டாவது தொடர்பு காயீன் மற்றும் ஆபேல் செலுத்திய பலிகளின் மையக்கருத்தில் தோன்றுகிறது. ஆதியாகமம் 4 நமக்குச் சொல்வது போல், தேவன் காயீனின் பலியை நிராகரித்தார், ஆனால் ஆபேலின் பலியில் பிரியமாயிருந்தார். இந்த பலிகளுக்கிடையேயான தேவனின் வேறுபாட்டிற்கான காரணம் ஆதியாகமம் 4:3-4 இல் தெளிவாக உள்ளது, அங்கு நாம் இந்த வார்த்தைகளைப் படிக்கிறோம்:

> காயீன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான் (ஆதியாகமம் 4:3-4).

மோசே இந்த பலிகளைப் பற்றி விவரிக்கும் விதத்தைப் பாருங்கள். 3 ஆம் வசனத்தில் காயீன் ”நிலத்தின் கனிகளை” கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான் என்று கூறினார், ஆனால் 4 ஆம் வசனத்தில் ஆபேல் ”மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளில்” சிலவற்றைக் கொண்டுவந்தான் என்று எழுதினார். இந்த வேறுபாடு மிகவும் முக்கியமானது. காயீன் வெறுமனே தனது வயலில் தன் கையில் அகப்பட்ட எல்லாப் பழங்களையும் சேகரித்தான். அவனுடைய வழிபாடு பெயரளவில் மட்டுமே இருந்தது. ஏனென்றால் அவன் தனது பயிரில் முதற்பேறானதை தேவனுக்காக எடுத்து வைக்கவில்லை. ஆனால் ஆபேல் உள்ளார்ந்த இருதயத்துடன் கொழுத்த பகுதிகளை (பழைய ஏற்பாட்டு பலிகளுக்கு மிகவும் உகந்தது) அவனது மந்தையின் தலையீற்றுகளிலிருந்து (மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி மிகச்சிறந்த மிருகங்கள்) கொண்டு வந்து தேவனின் சட்டத்தை நிறைவேற்றினான். காயீனின் பலி ஒரு போலியான வழிபாட்டை விட சற்றே உயர்ந்தது. ஆனால் அதற்கு மாறாக, ஆபேல் தேவனுக்கு உண்மையான ஆராதனையை ஏறெடுத்தான்.

எகிப்தியர்களுடன் இஸ்ரவேலை மேலும் இணைத்துக்காட்ட காயீன் மற்றும் ஆபேலின் பலிகளுக்கு இடையிலான இந்த வேறுபாட்டை மோசே பயன்படுத்தினார். யேகோவா தேவனுக்கு பலிசெலுத்த விரும்பியதால் இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்கும்படி மோசே முதலில் பார்வோனை அணுகினார் என்பதை நினைக்கும் போது இந்தப் பின்னணி வியக்க வைக்கிறது. யாத்திராகமம் 5:3 இல் நாம் வாசிப்பதுபோல மோசேயும் ஆரோனும் இந்த வார்த்தைகளைப் பார்வோனிடம் சொன்னார்கள்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எபிரெயருடைய தேவன் எங்களைச் சந்தித்தார்; நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி போகவிடவேண்டும் (யாத்திராகமம் 5:3).

ஆனால் பார்வோன் அவர்களின் கோரிக்கையை மறுத்தான். மோசே 4 ஆம் வசனத்தில் பதிவு செய்தபடி, பார்வோன் அவர்களிடம் கூறியது:

> "மோசேயும் ஆரோனுமாகிய நீங்கள் ஜனங்களைத் தங்கள் வேலைகளைவிட்டுக் கலையப்பண்ணுகிறது என்ன? உங்கள் சுமைகளைச் சுமக்கப் போங்கள்!" என்றான் (யாத்திராகமம் 5:4).

எனவே, காயீன் தனது பெயரளவிலான பலிகளால் தேவனை கனவீனம் செய்ததைப்போல, எகிப்தியர்கள் இஸ்ரவேலின் தேவனுக்கு உண்மையான ஆராதனையை ஏறெடுக்கவில்லை என்று பார்க்கிறோம். ஆயினும், ஆபேல் உண்மையான மற்றும் உகந்த பலிகளைச் செலுத்தியது போலவே, இஸ்ரவேலர்களும் யெகோவாவிற்கு உண்மையான ஆராதனை செய்ய நாடினர். இவ்வாறாக, மோசே எகிப்தின் மற்றொரு தொடர்பை காயீனுடனும், இஸ்ரவேலை ஆபேலுடனும் ஏற்படுத்தினார். மோசே இஸ்ரவேலின் அனுபவத்துடன் இணைப்புகளை உருவாக்கிய மூன்றாவது வழி கொலை செய்ததன் நோக்கம். காயீன் தனது சகோதரன் ஆபேலைக் கொன்றான். எகிப்தில் நடந்த இஸ்ரவேலர்களின் கொலைகளை நாம் நினைவுகூறும் போது இந்த நிகழ்வின் முக்கியத்துவம் தெளிவாகிறது. யாத்திராகமம் 1-2 இல், எகிப்தியர்கள் இஸ்ரவேலர்களை அதிகமாக வேலை வாங்கியது மட்டுமல்லாமல், அவர்களுடைய கைக்குழந்தைகள் உட்பட பலரைத் தீவிரமாகக் கொலை செய்தனர். இவ்விதமாக மோசே காயீன் மற்றும் எகிப்தியர்களுக்கிடையிலும், ஆபேல் மற்றும் இஸ்ரவேலர்களுக்கிடையிலும் இன்னும் அதிகமான தொடர்புகளை விரிவாக்கினார்.

மோசே இந்த தொடர்புகளை உருவாக்கிய நான்காவது வழி, பூமியில் காயீனின் இருப்பிடத்தை விவரிப்பதாகும். ஆபேலைக் கொன்றதற்காக தேவன் காயீனைச் சபித்தபோது, காயீனை செழிப்பான நிலத்திலிருந்து விரட்டினார். ஆதியாகமம் 4:11-12 இல் நாம் வாசிப்பதைப் போல:

> இப்பொழுது இந்தப் பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்... நீ நிலத்தைப் பயிரிடும்போது, அது தன் பலனை இனி உனக்குக் கொடாது; என்றார் (ஆதியாகமம் 4:11-12).

காயீன் தனது விவசாயம் மிகக்குறைந்த விளைச்சலைக் கொடுக்கும் இடங்களில் வசிக்கும்படி சபிக்கப்பட்டான். காயீனின் இருப்பிடம் பற்றிய இந்த விளக்கம் எகிப்து மற்றும் இஸ்ரவேலை மோசே வழிநடத்திச் சென்ற நிலம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பற்றிய அவரின் மதிப்பீட்டோடு நன்றாகப் பொருந்துகிறது. உபாகமம் 11:10-12 இல் கானான் மற்றும் எகிப்தை மோசே வேறுபடுத்திய விதத்தைப் பாருங்கள்:

> நீ சுதந்தரிக்கப்போகிற தேசம் நீ விட்டுவந்த எகிப்து தேசத்தைப்போல் இராது; அங்கே நீ விதையை விதைத்து, கீரைத்தோட்டத்திற்கு நீர்ப்பாய்ச்சுகிறதுபோல உன் காலால் நீர்ப்பாய்ச்சி வந்தாய். நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம். அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம் (உபாகமம் 11:10-12).

தேவன் காயீனை ஏதேனில் இருந்து வெகு தொலைவில் உள்ள எகிப்து போன்ற இடத்திற்கு அனுப்பினார். அங்கு விவசாயத்திற்கு அதிகப் பிரயாசம் தேவைப்பட்டது. மோசேயுடைய இஸ்ரவேல் வாசகர்கள் காயீனை எகிப்தியர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் மற்றொரு வழி இந்த நிகழ்வாகும்.

ஆதியாகமம் 4–5 காயீனை எகிப்துடனும் ஆபேலை இஸ்ரவேலுடனும் இணைத்த ஐந்தாவது வழி காயீனுடைய பாதுகாப்பின் கருப்பொருளாக இருந்தது. காயீன் தனது சகோதரன் ஆபேலைக் கொன்ற போதிலும், தேவன் அவனைத் தீமையிலிருந்து பாதுகாத்தார். ஆதியாகமம் 4:15 இல் தேவனிடமிருந்து இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கிறோம்:

> காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழு பழி சுமரும் (ஆதியாகமம் 4:15).

கொலைகாரனாக இருந்தாலும் தேவன் காயீனைத் தீமையிலிருந்து பாதுகாத்தார். மோசே இந்த நிகழ்வுகளை இஸ்ரவேல் எகிப்தில் தங்கள் சொந்த அனுபவத்துடன் தொடர்புபடுத்தும் வகையில் விவரித்ததை நாம் மீண்டும் பார்க்கிறோம். தேவன் எகிப்துக்குப் பெரும் பாதுகாப்பைக் கொடுத்திருந்தார். அவர்கள் கொலைகாரர்களாக இருந்தாலும், தேவனின் நியாயத்தீர்ப்புக்குத் தகுதியானவர்களாக இருந்தாலும், எகிப்துக்குச் சிறப்பான பாதுகாப்பை தேவன் நீண்டகாலம் வழங்கினார்.

எனவே, குறைந்தது ஐந்து வழிகளில் மோசே இந்த ஆதி காலத்திற்கும், இஸ்ரவேலின் பயண அனுபவத்திற்கும் இடையே அர்த்தமுள்ள இணைகளை ஏற்படுத்தியதை நாம் காண்கிறோம். தொழில்கள், ஆராதனை, கொலை, இருப்பிடம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் கருப்பொருள்கள், மோசே தனது இஸ்ரவேல் வாசகர்கள் இந்த சம்பவத்தை எகிப்தியர்களுடனும், ஆபேலை தேவஜனத்துடன் இணைப்பதன் மூலமும் தங்கள் வாழ்க்கையில் பொருத்திப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார் என்று சுட்டிக்காட்டுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பாவம் நிறைந்த காயீனின் வரலாற்றில் ஏற்படுத்தப்பட்ட தொடர்புகளை இப்போது நாம் பார்த்திருக்கும் வேளையில், ஆதியாகமம் 4:25-26 இல் உள்ள நீதிமான் சேத் பற்றிய இணையான வரலாற்றுக்கு நாம் திரும்ப வேண்டும்.

நாம் பார்த்தபடி, சேத் மற்றும் அவரது மகன் ஏனோஸ் பற்றி குறிப்பிடத்தக்க ஒரு கருத்தை மோசே வெளியிட்டார். ஆதியாகமம் 4:26 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள் (ஆதியாகமம் 4:26).

சேத் மற்றும் அவருடைய மகனைப் பற்றிய இந்த உண்மையை மோசே குறிப்பிட்டார், இதனால் அவரது வாசகர்கள் தங்களை ஆபேலுடன் மட்டுமின்றி ஆபேலுக்குப் பதிலாக ஆதாமின் குமாரனான சேத்துடன் அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்.

முதல் இடத்தில், சேத் யேகோவா தேவன் என்னும் தெய்வீக நாமத்தைப் பயன்படுத்தினார், மேலும் இந்த பயன்பாடு இஸ்ரவேல் மக்களுடன் அவரைத் தொடர்புடையவராக்கியது. யாத்திராகமம் புத்தகம் மோசேயின் நாட்களில் யேகோவா தேவன் என்னும் நாமம் உயர்ந்த இடத்திற்குச் சென்றது என்பதை போதுமான சுவாரஸ்யத்துடன் தெளிவுபடுத்துகிறது. உதாரணமாக, தேவன் மோசேயிடம் இவ்விதமாக யாத்திராகமம் 3:15 இல் பேசினார்:

> மேலும், தேவன் மோசேயை நோக்கி: "ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்வாயாக." என்றைக்கும் இதுவே என் நாமம், தலைமுறை தலைமுறைதோறும் இதுவே என் பேர்ப்பிரஸ்தாபம் (யாத்திராகமம் 3:15).

யேகோவா தேவன் என்ற நாமம் சேத்துடைய காலத்தில் இருந்து பயன்படுத்தப்பட்டு வந்தது, மோசேயின் காலத்தில், இந்தப் பெயர் தேவனுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய பெயராக மாறியது என்பதை வேதாகமப் பதிவானது குறிக்கிறது. இதன் காரணமாக, மோசேயின் தலைமையின் கீழ் உண்மையுள்ள இஸ்ரவேலர்கள் தங்களை நீதிமானாகிய சேத்துடன் இணைத்துக் கொண்டிருப்பார்கள். அவரைப் போலவே, அவர்களும் யேகோவா தேவன் என்னும் பெயரைப் போற்றினர். இரண்டாவது இடத்தில், இஸ்ரவேலர்கள் ஜெபம் என்னும் கருப்பொருளின் மூலம் தங்களை சேத்துடன் இணைத்திருக்க வேண்டும். இந்த மையக்கருத்து ஆதியாகமம் 4:26 இல் தோன்றுகிறது, அங்கே சேத்தின் குடும்பம் "தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்" என்று மோசே எழுதினார். பழைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாட்டில், "கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்வது" என்பது பெரும்பாலும் பிரச்சனை அல்லது தேவை ஏற்படுகிற நேரத்தில் தெய்வீக உதவிக்காக கூக்குரலிடுவதாகும். இந்த வெளிச்சத்தில், மோசே தான் வாழ்ந்த காலத்தில் இஸ்ரவேல் மக்களுடன் இரண்டாவது தொடர்பை கொண்டுவந்தார். மீதமுள்ள மோசேயின் ஆகமங்களிலிருந்தும், எகிப்திலிருந்து தொடங்கிய யாத்திரையில், இஸ்ரவேல் மக்கள் சேத் மற்றும் ஏனோக்கு அவரை அழைத்ததைப் போல, பல நெருக்கடிகளின் போது யேகோவா தேவனை உதவிக்கு அழைத்ததை அறிகிறோம். எனவே மோசே தனது சமகால உலகத்திற்கு இணையாக பாவம் நிறைந்த காயீன் மற்றும் நீதிமானாகிய சேத் பற்றிய கதைகளை வடிவமைத்தார். எகிப்தியர்கள் என்பவர்கள் காயீன் போன்றவர்கள் என்பதை அவரது வாசகர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் தனது வாசகர்கள் தாங்களும் ஆபேல் மற்றும் சேத்தைப் போன்றவர்கள் என்பதை அறிய வேண்டும் என்றும் அவர் விரும்பினார்.

இந்த அடிப்படை தொடர்புகளை மனதில் கொண்டு நாம் காயீனுடைய தலைமுறை மற்றும் சேத்தினுடைய தலைமுறையை நோக்கித் திரும்ப வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**வம்சவரலாறுகள்.** நாம் பார்க்க இருப்பது போல், மோசே இந்த தலைமுறைகளை வடிவமைத்தார், இதனால் இஸ்ரவேலர்கள் தொடர்ந்து எகிப்தியர்களை துன்மார்க்கர்களுடனும், தங்களை நீதிமான்களுடனும் தொடர்புபடுத்திக் கொள்வார்கள். அவரது முக்கிய நோக்கத்தை மேலும் அதிகரிக்க, ஆதியாகமம் 4:17-24 ஆனது காயீனின் வம்சாவளி எகிப்துடன் மறுக்கமுடியாத தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட வழிகளில் வகைப்படுத்துகிறது. இந்த தொடர்புகள் குறைந்தது ஆறு வழிகளில் தோன்றுகிறது. முதலில், நகரத்தை உருவாக்கும் ஒரு நபராக காயீன் மீது மோசே கவனம் செலுத்தினார். அவர் ஆதியாகமம் 4:17 இல் எழுதியது போல்:

> அப்பொழுது காயீன் ஒரு பட்டணத்தைக் கட்டினான் (ஆதியாகமம் 4:17).

இஸ்ரவேலர்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்ததால், எகிப்தியர்களுக்காக நகரங்களை உருவாக்குவது ஒரு பகுதியாகவே இருந்தது - எகிப்தியர்கள் சிறந்த நகரத்தை உருவாக்குபவர்கள் என்பதை இஸ்ரவேலர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்த காரணத்திற்காக, காயீனைப் பற்றிய இந்த வார்த்தைகள் எகிப்தியர்களுடன் வலுவான தொடர்புகளை உருவாக்கியிருக்கும்.

இரண்டாவதாக, காயீனின் நகரத்தின் பெயரையும் நாம் கவனிக்க வேண்டும். ஆதியாகமம் 4:17 இல் நாம் இதை வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவன் [காயீன்] ஒரு பட்டணத்தைக் கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரனாகிய ஏனோக்குடைய பேரை இட்டான். (ஆதியாகமம் 4:17).

மோசேயின் நாட்களில் இஸ்ரவேலர்களுக்கு, இந்த உண்மை எகிப்திய நடைமுறையை நினைவூட்டியது. யாத்திராகமம் 1:11 இல் மோசே அறிவித்தபடி:

> அப்படியே அவர்களைச் சுமைசுமக்கிற வேலையினால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் விசாரணைக்காரரை வைத்தார்கள்; அப்பொழுது அவர்கள் பார்வோனுக்காகப் பித்தோம், ராமசேஸ் என்னும் பண்டசாலைப் பட்டணங்களைக் கட்டினார்கள் (யாத்திராகமம் 1:11).

ராமசேஸ் என்னும் பார்வோனின் நினைவாக ராமசேஸ் பட்டணம் பெயரிடப்பட்டது. காயீனைப் போலவே, எகிப்தியர்களும் தங்கள் சுய மகிமை மற்றும் கனத்திற்காக நகரங்களுக்கு பெயரிட்டனர். இந்த வழியில், காயீனின் தலைமுறையானது காயீனுக்கும் எகிப்தியர்களுக்கும் இடையே மற்றொரு தொடர்பை ஏற்படுத்தியது.

காயீனின் வம்சாவளிக்கும் எகிப்துக்கும் இடையிலான மூன்றாவது தொடர்பு, காயீனின் வம்சாவளியான லாமேக்கு தான் செய்த கொலையினால் எடுத்துக் கொண்ட பெருமையில் தோன்றுகிறது. 4:23 இல் லாமேக்கு உண்மையில் தன் மனைவிகளுக்கு முன்பாக தன்னைப் புகழ்ந்து பாடினார் என்று வாசிக்கிறோம்.

> ஆதாளே, சில்லாளே, நான் சொல்வதைக் கேளுங்கள்;
> லாமேக்கின் மனைவிகளே, என் சத்தத்துக்குச் செவிகொடுங்கள்;
> எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன் (ஆதியாகமம் 4:23).

லாமேக்கின் கொடூரங்களைப் பற்றி பெருமை பேசுவது பழங்கால இஸ்ரவேலர்களின் மனதில் லாமேக்கை எகிப்தியர்களுடன் தொடர்புபடுத்தியிருக்க வேண்டும். பல பழங்கால எகிப்திய கல்வெட்டுகள் பார்வோன்களையும் அவர்களது படைகளையும் கொலைகாரச் சுரண்டல்களுக்காகப் பாராட்டியதை இஸ்ரவேலர்கள் நன்கு அறிந்திருப்பார்கள்.

குழந்தைகளின் மரணம் குறித்து மோசயின் கவனத்தில் நான்காவது தொடர்பு தோன்றுகிறது. லாமேக்கு சொன்னதை மீண்டும் பாருங்கள். 4:23 இல் நாம் வாசிக்கிறோம்:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> எனக்குக் காயமுண்டாக ஒரு மனுஷனைக் கொன்றேன்;
> எனக்குத் தழும்புண்டாக ஒரு வாலிபனைக் கொலை
> செய்தேன் (ஆதியாகமம் 4:23).

”வாலிபன்” என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய பதம் இங்கே *எலேட்* (יֶלֶד) ஆகும். சாதாரணமாக இது “ஆண் பிள்ளை” என்று அநேகவேளைகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. ஒரு குழந்தையை விட சற்று பெரிதாக இருந்த வாலிபன் லாமேக்கினால் பாதிக்கப்பட்டவனில் ஒருவன் ஆவான். நாம் அனைவரும் அறிந்திருக்கிறது போல, யாத்திராகமம் புத்தகத்தின் முதல் அதிகாரத்தில், இஸ்ரவேலர்களின் ஆண் பிள்ளைகளினுடைய மரணத்திற்கு பார்வோன் உத்தரவிட்டார். காயீனுடைய லாமேக்கைப் போல, எகிப்தியர்கள் இஸ்ரவேல் மக்களின் பாதுகாப்பற்றவர்களுக்கு எதிராக, அவர்களுடைய ஆண் குழந்தைகளுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தினர்.

காயீனுடைய குடும்பத்திற்கும் எகிப்தியர்களுக்கும் இடையிலான ஐந்தாவது தொடர்பு லாமேக்கினுடைய அதீத பாதுகாப்பின் மீது தோன்றுகிறது. ஆதியாகமம் 4:24 இல், லாமேக்கு காயீனை விட அதிக பாதுகாப்பை அனுபவிப்பதாகக் கூறினார்:

> காயீனுக்காக ஏழு பழி சுமருமானால்,
> லாமேக்குக்காக எழுபத்தேழு பழி சுமரும் என்றான்
> (ஆதியாகமம் 4:24).

தேவன் தன்னைப் பாதுகாப்பதாக லாமேக்கு நினைத்ததைப் போலவே, எகிப்தின் பார்வோன்களும் தங்கள் தெய்வங்ககளிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்தனர். உண்மையில், எகிப்தியர்கள் தீங்கிலிருந்து மேலும் மேலும் பாதுகாப்பை அனுபவித்தார்கள் என்பது நிச்சயமாக பல ஆண்டுகளாக தோன்றியது.

ஆறாவது இடத்தில், காயீனின் வம்சாவளியின் கலாச்சார நுட்பத்தை நாம் கவனிக்க வேண்டும். ஆதியாகமம் 4:20-22 இந்த மூன்று காயினீய சகோதரர்களான யாபால், யூபால் மற்றும் தூபால்-காயீன் பற்றி விவரிக்கப்பட்டுள்ள விதத்தைப் பாருங்கள்:

> யாபாலை… கூடாரங்களில் வாசம்பண்ணுகிறவர்களுக்கும் மந்தை மேய்க்கிறவர்களுக்கும் தகப்பனானான்… யூபால்… கின்னரக்காரர், நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான்… தூபால் காயீனைப்… பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான் (ஆதியாகமம் 4:20-22).

இந்த வார்த்தைகளால், மோசே காயீனின் குடும்பத்தை மிகவும் அதிநவீனமாக வகைப்படுத்தினார். யாபால் வெறும் மேய்ப்பன் அல்ல; அவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கால்நடை வளர்ப்பைக் கண்டுபிடித்தான். யூபால் இசையைக் கண்டுபிடித்தான், மற்றும் தூபால் – காயீன் அதிநவீன உலோகவியலைக் கண்டுபிடித்தான். மோசேயின் காலத்தில் இந்த இணைப்பை தவறவிட்டது இஸ்ரவேலர்களுக்கு மிகவும் கடினமாக இருந்திருக்கும். இஸ்ரவேல் மக்களின் முற்பிதாக்களின் எளிய, நாடோடி வாழ்க்கை முறைகளுடன் ஒப்பிடுகையில், எகிப்தின் கலாச்சாரம் மிகவும் நுட்பமானது. காயீனின் வம்சாவளிக்கும் எகிப்தியர்களுக்கும் இடையியேயான தொடர்பை தனது வாசகர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்பிய மோசே, காயீனின் பாவம் நிறைந்த வம்சாவளியைப் பற்றி இவ்விதமாக விவரித்தார்.

எனவே குறைந்தது ஆறு வழிகளில் மோசே காயீனின் தலைமுறை மற்றும் எகிப்தியர்களுக்கிடையேயான தொடர்புகளைக் கொண்டு வந்தார். நகர கட்டுமானம், நகரங்களுக்கு பெயரிடுதல், கொலையில் பெருமை, குழந்தைகளுக்கு எதிரான வன்முறை, தெய்வீக பாதுகாப்பு மற்றும் காயீனுடைய குடும்பத்தில் கலாச்சார நுட்பம் பற்றிய அவரது விளக்கங்கள் இந்த தொடர்புகளை உருவாக்க வடிவமைக்கப்பட்டுள்ளன.

இப்போது நாம் ஆதியாகமம் 5:1-32 இல் உள்ள சேத்தின் வம்சவரலாறை நோக்கித் திரும்ப வேண்டும். நாம் எதிர்பார்த்தபடி, மோசே சேத்திய வம்சாவளியை கட்டமைத்தார், அதனால் அவருடைய இஸ்ரவேல் வாசகர்கள் சேத்தின் சந்ததியுடன் தங்களை அடையாளம் காண முடியும். இந்த தொடர்பானது குறைந்தது நான்கு காரணிகளின் அடிப்படையில் கட்டப்பட்டது. முதலில், ஒரு உயிரியல் மட்டத்தில், இஸ்ரவேல் தேசம் சேத்தின் தலைமுறையிலிருந்து தோன்றியது என்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆதியாகமம் 5:32 ல் நாம் நோவாவின் மூன்று குமாரர்களின் பெயர்களை வாசிக்கிறோம்:

> நோவா ஐந்நூறு வயதானபோது, சேம் காம் யாப்பேத் என்பவர்களைப் பெற்றான் (ஆதியாகமம் 5:32).

சேம் இஸ்ரவேல் மக்களின் மூதாதையர் என்பதால் சேம் என்ற பெயர் மோசேக்கு மிகவும் முக்கியமானது. நவீன மொழிகளில் சேம் என்ற பெயரிலிருந்து ”செமிடிக்” அல்லது ”செமிட்” என்ற வார்த்தையைப் பெறுகிறோம். மற்ற தேசங்களும் சேமின் வித்திலிருந்து வந்திருந்தாலும், இஸ்ரவேலர்கள் தேவனின் விஷேசமாக தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக இருந்தனர், மேலும் அவர்கள் சேமின் சந்ததியிலிருந்து வந்தவர்கள். எனவே, இந்த எளிய உயிரியல் அர்த்தத்தில், மோசே தனது இஸ்ரவேல் வாசகர்களை சேத்தின் தலைமுறையுடன் இணைத்தார். சேத்தின் வம்சாவளிக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையிலான இரண்டாவது தொடர்பு சேத்தின் சந்ததியினரின் நீதியின் மீது மீண்டும் மீண்டும் கவனம் செலுத்துவதில் தோன்றுகிறது. சேத்தின் வம்சாவளி விசுவாசமுள்ள மற்றும் நீதியுள்ள சந்ததியாக வகைப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, ஆதியாகமம் 5:24 ன் படி:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான் (ஆதியாகமம் 5:24).

எபிரேய வேதாகமத்தில், ”தேவனோடு நடந்தான்” என்று மொழிபெயர்க்கப்பட்ட வெளிப்பாடு ஏனோக்கு மற்றும் நோவாவைப் பற்றி மட்டுமே நிகழ்கிறது. ஆயினும், மீண்டும் மீண்டும், விஷேசமாக உபாகமம் புத்தகத்தில், மோசே இஸ்ரவேல் மக்களிடம் அவர்கள் யேகோவா தேவனின் வழிகளில் நடந்து ஏனோக்கைப் போல இருக்க வேண்டும் என்று கூறினார். இந்த வகையில், மோசேயைப் பின்தொடரும் விசுவாசமுள்ள இஸ்ரவேலர்கள் சேத்தின் வம்சாவளியுடன் மற்றொரு அடையாளத்தைக் கண்டறிந்தனர். ஏனோக்கைப் போல இருக்க வேண்டும் என்பதே அவர்களின் குறிக்கோளாக இருந்தது. சேத்தின் தலைமுறை மற்றும் இஸ்ரவேல் மக்களின் அனுபவத்திற்கு இடையிலான மூன்றாவது தொடர்பு மோசேயின் சேத்திய எண்ணிக்கையில் வலியுறுத்தப்படுகிறது. சேத்தின் வம்சவரலாற்றில், அவருடைய சந்ததியினர் அதிக எண்ணிக்கையில் இருந்ததை நாம் அறிவோம். ”மற்ற குமாரரும் குமாரத்திகளும்” சேத்தின் குடும்பத்திற்கு பிறந்தார்கள் என்ற உண்மையை திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் மோசே சேத்தின் குடும்பத்தின் பெருக்கமான எண்ணிக்கையை வெளிக்கொண்டு வந்தார். உண்மையில் அவர் இந்த கருத்தை ஆதியாகமம் 5 இல் ஒன்பது முறை எழுதினார். சேத்தின் வம்சாவளியில் உள்ள மக்களின் எண்ணிக்கைக்கு கொடுக்கப்படும் இந்த முக்கியத்துவம் மோசேயின் இஸ்ரவேலர்களாகிய வாசகர்களுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்தது, ஏனென்றால் தேவன் அவர்கள் எகிப்தில் இருந்தபோதும் மற்றும் யாத்திரையின் போதும் அவர்களை எண்ணிகையில் பெரிதான அளவில் ஆசீர்வதித்திருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். நான்காவது இடத்தில், இஸ்ரவேல் மக்களை சேத்தியர்களுடன் தொடர்புபடுத்துவதற்காக பல சேத்தியர்கள் அனுபவித்த நீண்ட ஆயுசையும் மோசே வலியுறுத்தினார். உதாரணமாக, சேத்தின் சந்ததியைச் சார்ந்த மெத்தூசலா வேதாகம வரலாற்றில் மற்ற யாரையும் விட நீண்ட காலம் வாழ்ந்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆதியாகமம் 5:27 படி, அவர் 969 ஆண்டுகள் வாழ்ந்தார். பல சேத்தியர்கள் நீண்ட காலம் வாழ்ந்தார்கள். மோசேயின் பிரமாணம் குறிப்பிட்டுக்காட்டுவது போல், வாக்குத்தத்த நிலத்தில் நீண்ட ஆயுசு என்பது விசுவாசமுள்ளவர்களாகிய இஸ்ரவேல் மக்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதால், சேத்தின் வம்சாவளியினரின் நீண்ட ஆயுசின் மீதான மோசேயின் கவனம் முக்கியமானது. சேத்தின் தலைமுறையினரின் நீண்ட ஆயுசை சுட்டிக்காட்டியதன் மூலம், மோசே சேத்தியர்கள் மற்றும் இஸ்ரவேல் மக்களிடையே இன்னொரு தொடர்பை ஏற்படுத்தினார். எனவே மோசே தனது சமகால உலகத்துடன் உறுதியான தொடர்புகளை ஏற்படுத்த பூர்வகால வரலாற்றில் ஆரம்பகால வன்முறை மற்றும் விடுதலையைக் குறித்த விசுவாசம் பற்றி எழுதினார். காயீன் மற்றும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவரது சந்ததியினர் இஸ்ரவேல் மக்களின் மீது வன்முறையை ஏற்படுத்திய எகிப்தியர்களுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும். மற்றும் ஆபேல், சேத் மற்றும் சேத்தின் சந்ததியினர் எகிப்திய வன்முறையால் பாதிக்கப்பட்ட இஸ்ரவேலர்களுடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும். இந்த தொடர்புகள் மோசேயின் வரலாற்றின் இந்தப் பகுதியில் அவருடைய செயல் திட்டத்தின் மையத்தில் இருந்தன.

இப்போது ஆரம்பகால வன்முறை மற்றும் விசுவாசத்தின் பதிவை மோசே எவ்வாறு கையாண்டார் என்பதை நாம் பார்த்திருக்கிறோம், நாம் பிற்காலத்தில் வன்முறை மற்றும் விடுதலையைக் குறித்த விசுவாசம் பற்றி ஆதியாகமம் 6:1-8 யை சுருக்கமாகப் பார்க்கலாம்.

## பிந்தைய வன்முறையும் நம்பிக்கையும்

மோசே இந்த மனிதர்களைப் பற்றி விவரித்ததை 6:4 இல் குறிப்பாகப் பார்ப்போம்:

> அந்நாட்களில் இராட்சதர் பூமியிலே இருந்தார்கள்; --- பின்பு --- தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர்பெற்ற மனுஷராகிய பலவான்களானார்கள் (ஆதியாகமம் 6:4).

இராட்சதர்கள் வலிமைமிக்க போர்வீரர்கள், அவர்கள் தங்களின் சுரண்டல்களுக்காக நன்கு அறியப்பட்டவர்கள் என்பதை நாம் ஏற்கனவே பார்த்திருந்தோம். ஆனால் மோசே இராட்சதர்களைப் பற்றி ஒரு முக்கியமான கருத்தை வெளியிட்டார் என்பதை கவனியுங்கள். இராட்சதர்கள் பூர்வ காலங்களிலும் அதற்குப் பின்பும் பூமியில் இருந்ததாக அவர் கூறினார்.

ஜலப்பிரளயத்திற்குப் பிறகு வாழும் இராட்சதர்களுக்கு இந்த குறிப்பைச் சேர்ப்பதன் மூலம், மோசே தனது இஸ்ரவேல் வாசகர்களுக்கு அவர்களின் சமீபத்திய வரலாற்றில் அவர்கள் இராட்சதர்களை சந்தித்ததை நினைவூட்டினார். வேதாகமத்தில் இராட்சதர்கள் என்ற சொல் தோன்றும் மற்றொரு இடம் எண்ணாகமம் 13:32-33. அங்கே, மோசே கானானுக்கு அனுப்பிய உளவாளிகள் இராட்சதர்களைப் பார்த்ததாகத் தெரிவித்தனர். அவர்கள் இந்த வார்த்தைகளைக் கூறினார்கள்:

> நாங்கள் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த அந்த தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம்… அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம், அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் (எண்ணாகமம் 13:32-33).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விசுவாசமற்ற உளவாளிகள் கானான் நிலம் மோசமான வன்முறை நிறைந்ததும் மற்றும் அச்சுறுத்துவதுமான இடம் என்றும், கானானிய குடிகளிடையே, தங்கள் இதயத்தில் அச்சத்தை உண்டாக்கிய தீங்கு ஏற்படுத்தும் வீரர்கள் போன்ற இராட்சதர்கள் இருந்தார்கள் என்றும் தெரிவித்தனர். எதிர்பாராதவிதமாக, இந்த அறிக்கை மோசேயைப் பின்பற்றின முதல் தலைமுறையினர் வெற்றி பெறுவதற்கான தேவனின் அழைப்பிலிருந்து விலகிச் செல்ல வழிவகுத்தது. இந்த விசுவாசக்குறைவினால் தேவன் மிகவும் கலங்கினார், முதல் தலைமுறை இறக்கும் வரை மற்றும் ஒரு புதிய தலைமுறை வெற்றிக்கான காரணத்தை எடுக்கத் தயாராகும் வரை அவர் இஸ்ரவேலர்களை வனாந்தரத்தில் இலக்கு இல்லாதவர்களைப் போல அலைந்து திரியும்படி அனுப்பினார். இந்த வெளிச்சத்தில், மோசே தனது பூர்வகால வரலாற்றின் இந்தப் பகுதிக்கும் இஸ்ரவேல் மக்களின் அனுபவத்திற்கும் இடையே மற்றொரு வலுவான தொடர்பை எப்படிக் கொண்டு வந்தார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அவர் தனது இஸ்ரவேலர்களாகிய வாசகர்கள் ஆதியாகமம் 6 இல் சொல்லப்பட்டுள்ள பூர்வகால இராட்சதர்களை கானானின் திகிலூட்டும் இராட்சத வீரர்களுடன் தொடர்புபடுத்திக் கொள்ள விரும்பினார். இந்த வழியில், ஆதியாகமம் 6:1-8 இல் உள்ள வன்முறையும் விடுதலையைக் குறித்ததான விசுவாசமும் நேரடியாக கானானைக் கைப்பற்றுவதில் உள்ள வன்முறை பற்றிய அச்சுறுத்தலைப் பற்றி பேசின. இஸ்ரவேல் மக்களின் சமகால அனுபவத்தில் மக்களுடன் தொடர்புடைய முதன்மையான கதாபாத்திரங்களைப் பார்த்தோம். இப்போது நாம் இரண்டாவது கேள்வியைக் கேட்க வேண்டும்: வாக்குத்தத்த நிலத்தை நோக்கி மோசேயைப் பின்பற்றும்போது இஸ்ரவேல் மக்களுக்கு இந்த தொடர்புகளின் தாக்கங்கள் என்ன?

## தாக்கங்கள்

இஸ்ரவேல் மக்களுக்கான மோசேயின் செய்தியின் மையப்பொருளை புரிந்துகொள்வதற்கு, இந்தப் பொருளில் இரண்டு முறை தோன்றும் அடிப்படை காட்சியை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆதியாகமம் 4:1–6:8 வரையிலான பகுதிகள் வன்முறையின் இரண்டு காட்சிகளையும் விடுதலையைக் குறித்ததான விசுவாசத்தையும் கொண்டுள்ளது என்பதை நீங்கள் நினைவு கூர முடியும்; 4:1–5:32 இல் காயீன் மற்றும் அவரது சந்ததியினரின் வன்முறையின் மீது கவனம் செலுத்தப்பட்டது. ஆயினும், 5:29 மற்றும் 32 நோவாவின் மூலம் மீட்பு வரும் என்பதைக் குறிப்பிடுவதற்காக நோவாவைக் குறிப்பிடுகிறது. அதே வழியில், ஆதியாகமம் 6:1-8 தேவக் குமாரர்கள் மற்றும் இராட்சதர்களின் வன்முறையைப் பற்றி அறிக்கை தருவது போல, ஆதியாகமம் 6:8 நோவாவை மீண்டும் குறிப்பிடுகிறது, தேவன் இந்த அச்சுறுத்தல்களிலிருந்தும் விடுவிக்க விரும்பினார் என்பதைக் குறிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மோசேயைப் பின்பற்றின இஸ்ரவேலர்களுக்கு, இந்த காட்சிகள் நல்ல செய்தியாக இருந்திருக்க வேண்டும். தேவன் ஏற்கனவே அவர்களுக்காக என்ன செய்தார், அவர் அவர்களுக்காக என்ன செய்யப்போகிறார் என்பதை அவர்கள் அறிவித்தார்கள். ஒருபுறம், தேவன் இஸ்ரவேல் மக்களின் மூதாதையர்களை கானானியரிடமிருந்து விடுவிக்க நோவாவைப் பயன்படுத்தியதைப் போலவே, அவர் ஏற்கனவே மோசேயைப் பயன்படுத்தி இஸ்ரவேலர்களை எகிப்தியர்களிடமிருந்து விடுவித்தார். மறுபுறம், தேவன் பூர்வகால இராட்சதர்களிடமிருந்து விடுதலையைப் பெற நோவாவைப் பயன்படுத்தியதைப் போலவே, கானான் தேசத்தில் இராட்சதர்களின் அச்சுறுத்தலை எதிர்கொண்டதால் இஸ்ரவேலர்களை விடுவிக்க அவர் மோசேயைப் பயன்படுத்த இருந்தார்.

ஆதியாகமம் 4:1–6:8 இன் கட்டமைப்பையும் மூல அர்த்தத்தையும் இப்போது நாம் பார்த்திருக்கிறோம், நாம் நமது இறுதித் தலைப்பான நவீன பயன்பாட்டிற்கு திரும்ப வேண்டும். மோசேயின் பூர்வகால வரலாற்றின் இந்தப் பகுதியை நமது நவீன வாழ்க்கைக்குப் பயன்படுத்த புதிய ஏற்பாடு எவ்வாறு நமக்குக் கற்பிக்கிறது?

# நவீன பயன்பாடு

நமது வழக்கமான பாணியில், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று நிலைகளின் அடிப்படையில் புதிய ஏற்பாடு எவ்வாறு இந்தக் கருப்பொருள்களை விவரிக்கிறது என்பதை ஆராய்வோம்: முதலில், கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தபோது நடந்த ராஜ்யத்தின் துவக்கம்; இரண்டாவதாக, தேவாலயத்தின் வரலாறு முழுவதும் நீடிக்கும் ராஜ்யத்தின் தொடர்ச்சி; மூன்றாவதாக, ராஜ்யத்தின் எல்லாவற்றிற்குமான முடிவு, கிறிஸ்து மகிமையுடன் திரும்பி வந்து புதிய வானத்தையும் புதிய பூமியையும் கொண்டுவருகிறார். கிறிஸ்துவின் ராஜ்யத்தின் இந்த கட்டங்கள் இன்று கிறிஸ்தவர்களுக்கு வன்முறை மற்றும் விடுதலையைப் பயன்படுத்தும் வழிகளைப் பற்றிய முழுமையான புரிதலை அடைந்து கொள்வதற்காக தனித்தனியாக ஆராயப்பட வேண்டும். ராஜ்யத்தின் துவக்கத்தில் வன்முறையின் நோக்கங்கள் மற்றும் விடுதலையின் நம்பிக்கையை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தொடக்கம்

கிறிஸ்துவின் முதல் வருகையில் இராஜ்ஜியத்தின் துவக்கம், பூர்வகால வரலாற்றில் வன்முறை ஆகியவை உலகத்தை குறைந்தபட்சம் இரண்டு வழிகளில் நினைவு கூர்கிறது: முதலில், உலகத்தில் இயேசு அனுபவித்த வன்முறையுடனான தொடர்புகளைக் காண்கிறோம்; இரண்டாவதாக, இயேசு அவரது மக்களுக்குக் கொண்டு வந்த விடுதலையுடனான தொடர்புகளைக் காண்கிறோம். இயேசு தனது முதல் வருகையில் அனுபவித்த துன்பத்தை முதலில் பார்ப்போம்.

## வன்முறை

இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி நன்கு அறிந்த எவருக்கும் இயேசு உலகத்திலிருந்து பல வழிகளில் துன்புறுத்தல்களை அனுபவித்தார் என்பது தெரியும். அவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சேவை செய்தபோது, அவர் அவர்களின் துயரத்தையும் வலியையும் சுமந்தார். ஆனாலும், புதிய ஏற்பாட்டின் படி, கிறிஸ்துவுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறையின் உச்சகட்டம் சிலுவையில் அவர் மரித்தது என்பதில் சந்தேகமில்லை. அவரது காலத்தில் அறியப்பட்ட மிக மோசமான மரணதண்டனையை அனுபவிப்பதன் மூலம், இயேசு உண்மையில் நீதிமான்கள் அனுபவித்ததை விட மோசமான ஒரு விதியை அனுபவித்தார். இந்த ஒளியில் சிலுவையில் அவரது மரணத்தை பூர்வகால உலகின் வன்முறையுடன், அல்லது இன்னும் குறிப்பாகச் சொன்னால், ஆபேலின் மரணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க புதிய ஏற்பாடு இயேசுவின் துன்பத்தை விவரிப்பதில் ஆச்சரியமில்லை. எபிரெயர் நிருபத்தின் எழுத்தாளர் கிறிஸ்து பொல்லாத மனிதர்களால் துன்பப்பட்டதை அறிந்திருந்தார், இந்த காரணத்திற்காக, அவர் கிறிஸ்துவின் மரணத்தை 12:23-24 இல் ஆபேலின் மரணத்துடன் ஒப்பிட்டார்:

> பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்துசேர்ந்தீர்கள் (எபிரெயர் 12:23-24).

மோசேயின் பூர்வகால வரலாற்றின் குறிப்பு இங்கே தெளிவாக உள்ளது. கிறிஸ்துவின் சிந்திய இரத்தம் ஆபேலின் இரத்தத்தை விட சிறந்த அல்லது மேம்பட்ட வார்த்தையைப் பேசுகிறது. அதாவது, ஆபேலின் மரணத்தை விட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்துவின் மரணம் தேவனுடைய பார்வையில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. இயேசுவின் மரணம் சாதாரண நிகழ்வு அல்ல. அவரை விசுவாசிக்கும் அனைவருக்குப் பதிலாகவும் அவர் பாடுபட்டதால் அவரது மரணம் அவரது மக்களின் பாவங்களுக்கு பரிகாரம் செய்தது. ஆனால் இதற்கு அப்பால், கிறிஸ்துவின் மரணம் தேவனின் நியாயமான கோபத்தை ஆபேலின் இரத்தத்தை விட அதிகமாக தூண்டியது. இந்த வெளிச்சத்தில், பூர்வகால வரலாற்றின் வன்முறை பற்றிய மோசேயின் கணக்கை நாம் வாசிக்கும்போது, மோசே ஏன் இந்த அதிகாரங்களை அவரது மூல வாசகர்களான இஸ்ரவேலர்களுக்கு எழுதினார் என்பதை நாம் சாதரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. புதிய ஏற்பாட்டுக் கண்ணோட்டத்தில், பூர்வகால வரலாற்றில் நீதிமான்களுக்கு இழைக்கப்பட்ட வன்முறை ராஜ்யத்தின் துவக்கத்தில் கிறிஸ்துவின் பாடுகளை எதிர்பார்த்தது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

புதிய ஏற்பாடு எவ்வாறு பழங்கால உலகத்தின் வன்முறைக்கும் கிறிஸ்துவின் பாடுகளுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்துகிறது என்பதை இப்போது நாம் பார்த்திருக்கிறோம், ஆதியாகமத்தின் இந்த பகுதியைத் தொடும் இரண்டாவது வழிக்கு நாம் திரும்ப வேண்டும். இயேசு உலகிற்கு கொண்டு வந்த விடுதலையின் நம்பிக்கையில் ஒரு குறிப்பிடத்தக்க இணைப்பும் கூட ஏற்படுகிறது.

## விடுதலை

இயேசு தனது பொது ஊழியத்தின் பெரும்பகுதியை விசுவாசத்தின் செய்தியாக சுவிசேஷத்தை, அவரைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு நாள் வாழ்க்கையின் பாடுகள் முடிவடையும் என்ற செய்தியை அறிவிப்பதில் செலவிட்டார். இந்த சுவிஷேசத்தைக் குறித்த செய்தியின் மீதான இயேசுவின் ஈடுபாடு அவரது போதனைகள் முழுவதிலும் தோன்றுகிறது. ஆனால் மலைப்பிரசங்கத்தில் ஆசீர்வாதத்தின் தொடக்க அறிக்கைகளான பாக்கியவான்களின் வேதபகுதியில் காணப்படும் விடுதலையின் செய்தி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். இயேசு இந்த புகழ்பெற்ற பிரசங்கத்தை ஆரம்பித்தபோது, அவர் இந்த வார்த்தைகளை மத்தேயு 5:10-12 இல் கூறினார்:

> நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும் (மத்தேயு 5:10-12).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவின் போதனை ஊழியத்தின் முக்கிய அக்கறைகளில் ஒன்று தேவன் தனது மக்களை விட்டு விலகவில்லை என்ற விசுவாசம் தரும் செய்தியை கொண்டு வருவது என்பதை இந்த பாக்கியவான்களின் பகுதி வெளிப்படுத்துகிறது. இயேசு தம்மைப் பின்பற்றுபவர்களை தேவன் ஒரு நாள் எல்லா துன்பங்களிலிருந்தும் விடுவிப்பார் என்ற விசுவாசத்துடன் இருக்கும்படி ஊக்கப்படுத்தினார். ஆனால் இயேசு விடுதலையைக்குறித்த விசுவாசத்தின் சுவிஷேசத்தை வெறுமனே போதிக்கமட்டும் செய்யவில்லை - அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம் அவர் அறிவித்த விடுதலையை நிறைவேற்றவும் செய்தார். இயேசு தாவீதின் பூரண குமாரன் என்பதால், அவருடைய மரணம் தேவனுடைய மக்களின் பாவங்களுக்கு பரிகாரம் செய்தது. அவரது மரணம் பாவத்திற்கான விலையைச் செலுத்தியது, இதனால் அவரைப் பின்பற்றுபவர்கள் இனி மரணத்தின் பயத்திற்கு அஞ்ச வேண்டியதில்லை. எபிரெயர் 2:14-15 இல் நாம் வாசிக்கையில், இயேசு மரித்ததினால்:

> ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார் (எபிரெயர் 2:14-15).

ஆகவே, வன்முறையின் கருப்பொருள்கள் மற்றும் விடுதலையின் நம்பிக்கை ஆகியவை கிறிஸ்துவில் ராஜ்யத்தின் துவக்கத்திற்கு உடனடியாகப் பொருந்தும் என்பதை நாம் காண்கிறோம். இஸ்ரவேல் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களை அறிவிக்கவும், விடுவிப்பதற்கு தேவனுடைய வல்லமை பற்றி இஸ்ரேலுக்குக் கற்பிக்கவும் மோசே எழுதியது போல, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து பாடு அனுபவிக்கவும் மற்றும் உலகில் உள்ள துன்மார்க்கத்தின் வல்லமையிலிருந்து தனது மக்களுக்கு விடுதலையை வழங்கவும் வந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. புதிய ஏற்பாடு இயேசுவின் முதலாம் வருகையை பூர்வகால வரலாற்றுடன் இணைக்கும் சில வழிகளை நாம் பார்த்திருக்கிறோம், புதிய ஏற்பாடு எப்படி பூர்வகால வரலாற்றின் இந்தப் பகுதியை ராஜ்யத்தின் தொடர்ச்சி, கிறிஸ்துவினுடைய முதல் மற்றும் இரண்டாவது வருகைக்கு இடையே உள்ள காலம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்துகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# தொடர்ச்சி

ஆதியாகமம் 4:1–6:8 இன் கருப்பொருளை ராஜ்யத்தின் தொடர்ச்சி எவ்வாறு தொடுகிறது என்பதை புதிய ஏற்பாடு விளக்குவதற்கு குறைந்தது இரண்டு வழிகள் உள்ளன, மேலும் இந்தக் குறிப்புகள் வேதத்தின் இந்த பகுதியை கிறிஸ்தவ சபைக்குப் பயன்படுத்தும்போது அடிப்படை வழிகாட்டுதலை வழங்குகின்றன. ஒருபுறம், புதிய ஏற்பாடு தேவனுடைய மக்களுக்கு எதிரான வன்முறையின் தொடர்ச்சியை எதிர்பார்க்க வேண்டும் என்று போதிக்கிறது, மறுபுறம் விடுதலைக்காக கிறிஸ்துவில் தொடர்ந்து விசுவாசம் வைப்பதன் மூலம் இந்த கடினமான காலங்களை நாம் கடந்து செல்வதற்கு நம்மை ஊக்கப்படுத்துகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கு எதிராக நாம் வன்முறையை எதிர்பார்க்க வேண்டும் என்ற உண்மையை முதலில் கருத்தில் கொள்ள வேண்டும்.

## தொடரும் வன்முறை

பல சமயங்களில் இயேசு அவரைப் பின்பற்றுபவர்கள் உலகத்திலிருந்து வெறுப்பையும், துன்பத்தையும் அனுபவிப்பார்கள் என்று போதித்தார். ஆனால் மத்தேயு 23:34-35 இல், இந்த பாடுகள் பூர்வகால உலகில் நீதிமான்களின் பாடுகளுடன் தொடர்புடையது என்ற உண்மையின் மீது இயேசுவே கவனத்தை ஏற்படுத்தினார். இயேசு இதை பரிசேயர்களிடம் கூறினார்:

> ஆகையால், இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் வேதபாரகரையும் உங்களிடத்தில் அனுப்புகிறேன். அவர்களில் சிலரைக் கொன்று சிலுவைகளில் அறைவீர்கள், சிலரை உங்கள் ஆலயங்களின் வாரினால் அடித்து, ஊருக்கு ஊர் துன்பபடுத்துவீர்கள். நீதிமானாகிய ஆபேலின் இரத்தம்முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள் (மத்தேயு 23:34-35).

இயேசு தனது சீஷர்களை உலகத்திற்குள் அனுப்பும்போது, அவர்கள் கடுமையாக துன்புறுத்தப்படுவார்கள் என்று முன்னறிவித்தார். ஆனால் இந்த முன்னறிவிப்பை இயேசு எவ்வாறு பூர்வகால வரலாற்றோடு தொடர்புபடுத்தினார் என்பதையும் கவனியுங்கள். அவரைப் பின்பற்றுபவர்களுக்கு எதிரான வன்முறையானது, காயீன் கொலைசெய்த, நேர்மையான ஆபேலின் இரத்தத்தைச் சிந்தும்படியான வன்முறையின் வடிவத்தைத் தொடரும் என்று அவர் கூறினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தொடரும் விசுவாசம்

ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் எப்போதும் துன்புறுத்தப்படுவார்கள் என்பதை நாம் உணரும்போது, கிறிஸ்துவில் நம் விசுவாசத்தைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் நாம் காணலாம். எபிரெயர் நிருபத்தின் ஆசிரியர் தனது நிருபத்தின் 11 வது அதிகாரத்தில் இந்த விஷயத்தைப் பற்றிக் கூறினார். 11:4 இல் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான் (எபிரெயர் 11:4).

இந்த பத்தியில் உள்ள பிரதான கருத்து என்னவென்றால், பல நூற்றாண்டுகளாக கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆபேலின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்பதே. ஆபேலின் நீதி அவருடைய துன்மார்க்க சகோதரனிடமிருந்து அவருக்கு பிரச்சனையை ஏற்படுத்தினாலும், நம்முடைய நாட்களிலும் கூட அனைத்து விசுவாசிகளும் பின்பற்ற வேண்டிய உண்மையின் உதாரணமாக ஆபேல் நிற்கிறார். ஆதலால் பூர்வகால வரலாற்றில் வன்முறை மற்றும் விடுதலையைக் குறித்ததான கருப்பொருள்களானது ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்கும் பொருந்தும். ஒருபுறம், நம் காலத்தில் எதிர்ப்பையும் வன்முறையையும் அனுபவிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். ஆனால் மறுபுறம், இந்த கஷ்ட காலங்களை நாம் சகித்துக்கொள்வதால், நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே ஜெயம் கொள்வோம், மேலும் கிறிஸ்து ஒரு நாள் நம்மை விடுவிப்பார் என்று நம்புகிறோம்.

ராஜ்யத்தின் தொடக்கம் மற்றும் தொடர்ச்சிக்குள் வன்முறை மற்றும் விடுதலையின் கருப்பொருள்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதைப் பார்த்தோம், இப்பொழுது நாம் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் இறுதி கட்டத்திற்கு திரும்ப வேண்டும், அதாவது அவருடைய இரண்டாவது வருகை.

## ராஜ்யத்தின் நிறைவு

எளிமையாகச் சொன்னால், கிறிஸ்துவின் வருகையில், தேவனுடைய மக்களுக்கு எதிரான வன்முறையின் முடிவைக் காண்போம், நித்திய ஆசீர்வாத உலகத்திற்கு செல்லக்கூடிய இறுதி விடுதலையை அனுபவிப்போம் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## வன்முறையின் முடிவு

வன்முறையின் முடிவு என்பது புதிய ஏற்பாட்டின் உருவப்படத்தின் மைய அம்சமாகும். கிறிஸ்து திரும்பி வரும்போது, அவர் எந்தவித வன்முறைகளுமில்லாத, முழுவதுமாக புதுப்பிக்கப்பட்ட சிருஷ்டிப்பைக் கொண்டு வருவார். வெளிப்படுத்தின விசேஷம் 21:1-5 இல் கிறிஸ்துவின் வருகையை அப்போஸ்தலனாகிய யோவான் விவரித்த விதத்தைக் கேளுங்கள்:

> பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின…மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, "மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின." சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: "இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்" என்றார் (வெளிப்படுத்தின விசேஷம் 21:1-5).

## இறுதி விடுதலை

இருப்பினும், அதே சமயத்தில், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் நிறைவு வெறுமனே வன்முறையை முடிவுக்குக் கொண்டுவராது. அவர் திரும்பி வரும்போது, அவர் தனது மக்களுக்கு எல்லையற்ற ஆசீர்வாதங்களையும் அமைதியையும் வழங்குவார். நம் விடுதலை முழுமையாகவும் இறுதியாகவும் இருக்கும். வெளிப்படுத்தின விசேஷம் 22:1-2 இல் நமது இறுதி விடுதலையைப் பற்றிய இந்த விளக்கத்தைப் படிக்கிறோம்:

> பின்பு, பளிங்கைப்போல தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் (வெளிப்படுத்தின விசேஷம் 22:1-2).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் இறுதி விடுதலையின் நம்பிக்கை புதிய ஏற்பாடு முழுவதும் காணப்படுகிறது. இது கிறிஸ்தவ நம்பிக்கையின் உச்சத்தை வெளிப்படுத்துகிறது. இந்த உலகின் சோதனைகள் மற்றும் கஷ்டங்கள் வரவிருக்கும் உலகின் வாழ்க்கை தரும் அதிசயங்களால் மாற்றப்படும் நாளுக்காக நாம் ஏங்குகிறோம். துன்பம் மகிழ்ச்சியாக மாறும். துயரம் வெற்றியாக மாறும். மரணம் நித்திய வாழ்வாக மாறும். எனவே, இஸ்ரவேல் கானானை நோக்கி முன்னேற ஊக்குவிப்பதற்காக ஆதியில் இருந்த வன்முறை உலகத்தைப் பற்றி மோசே எழுதியதைப் போலவே, ராஜ்யத்தின் நிறைவில் வருகிற புதிய உலகத்திற்காக காத்திருப்பதற்கு புதிய ஏற்பாடு நமக்குக் கற்பிக்கிறது. கிறிஸ்து திரும்பி வரும்போது, அவரை நம்பிய அனைவரும் வன்முறைக்கு ஒரு முடிவைக் காண்பார்கள், மேலும் அவர்கள் நித்திய இரட்சிப்பின் உலகத்திற்கு செல்லும் ஒரு முழுமையான மற்றும் மகிமையான விடுதலையைப் பெறுவார்கள்.

# முடிவுரை

இந்த பாடத்தில் ஆதியாகமம் 4:1–6:8 இல் விவரிக்கப்பட்டுள்ள ஆதி கால உலகின் வன்முறையைக் குறித்து பல அம்சங்களைப் பார்த்தோம். ஆதியாகமத்தின் இந்த பகுதியின் கட்டமைப்பை நாம் கவனித்திருக்கிறோம். கானானை நோக்கி அவரைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலர்களை ஊக்குவிப்பதற்காக மோசே எவ்வாறு இந்த விஷயத்தை முதலில் எழுதினார் என்பதையும் நாம் பார்த்தோம். கிறிஸ்தவர்களாகிய நாம் நமது புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்கு ஆதி கால வரலாற்றின் இந்தப் பகுதியை பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்பதையும் கற்றுக்கொண்டோம். ஆதியாகமத்தின் இந்தப் பகுதியை மோசே முதலில் இஸ்ரவேலுக்காக எழுதியததைப் போல நாம் பார்க்கும்போது, அது கடந்த காலத்தில் நடந்த நிகழ்வின் ஒரு பதிவை விட அதிகமானதாக தோன்றுகிறது. அதற்கு பதிலாக, ஆதி கால உலகில் தேவன் வன்முறையிலிருந்து ஜனங்களை விடுவித்ததை நாம் பார்க்க முடியும், பின்னர் அவர் மோசேயின் நாளில் இஸ்ரவேலை விடுவித்ததால், கிறிஸ்து ஒரு நாள் இந்த வன்முறை உலகத்திலிருந்தும் நம்மை விடுவிப்பார் என்ற நம்பிக்கையை நாம் அதிகரிக்க முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.